மாலை பதிப்பு

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
சுபீட்சம்
SUPEEDSAM
EVERYTHING FOR PEOPLE

செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள
supeedsam.com

24.09.2022 சனிக்கிழமை
supeedsam.com
supeedsam@gmail.com


## மகாசங்கத்தினருக்கு, ஜனாதிபதியால் கடிதம் அனுப்பி வைப்பு



பௌத்த விகாரைகள் உட்பட பதிவு செய்யப்பட்ட ஏனைய மதத் தலங்களில் 180 அலகிற்கும் அதிக மின் பாவனையைக் கொண்டவையே அதிக மின்கட்டணத்தை செலுத்த வேண்டியுள்ளது. இவ்வாறு அதிக மின்சார தேவை கொண்ட மத வழிபாட்டு தளங்களில் சூரிய மின்உற்பத்தி தொகுதியைப் பொறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். மத வழிபாட்டுத் தலங்களில் மின்கட்டண நெருக்கடி தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சைகளையடுத்து மகாசங்கத்தினருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார். அந்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது : 'அண்மைக் காலமாக நாட்டில் படிப்படியாக வளர்ச்சியடைந்த பொருளாதார நெருக்கடியின் நேரடி விளைவாகவே மின்சார நெருக்கடியும் ஏற்பட்டுள்ளது. இந்த நெருக்கடியிலிருந்து பொது மக்கள் மற்றும் அனைத்து மத சமூகமும் மீளக் கூடிய

02

## அதியுயர் பாதுகாப்பு வலயங்களாக பிரகடனப்படுத்த அமைச்சருக்கு அதிகாரம் வழங்கப்படவில்லை

### இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தல்

உத்தியோகபூர்வ இரகசிய சட்டத்தின் பிரிவு 2க்கு அமைய, பெரிய பகுதிகளை அதியுயர் பாதுகாப்பு வலயங்களாக பிரகடனப்படுத்த அமைச்சருக்கு அதிகாரம் வழங்கப்படவில்லை என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது. அந்தப் பிரிவின் கீழ், எந்தவொரு நிலத்தையும், கட்டடத்தையும், கப்பல் அல்லது விமானத்தையும் தடைசெய்யப்பட்ட இடமாக பிரகடனப்படுத்த முடியும் என்றும் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. கொழும்பின் பல பகுதிகளை அதி உயர் பாதுகாப்பு வலயங்களாக அறிவித்து, ஜனாதிபதியால் நேற்று (23) வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. அது தொடர்பில் சங்கம், இன்று (24) வெளியிட்ட ஊடக அறிக்கையில் மேற்குறிப்பிட்ட விடயம் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

## ஆஸ்துமா நோயால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

இந்த வருடத்தில் ஆஸ்துமா நோயால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் அதிகம் பதிவாகியுள்ளதாக லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார். இதேவேளை ஆஸ்துமா நோயால் பாதிக்கப்பட்ட சுமார் 60 சிறுவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் கொரோனா தொற்றும் இந்த நிலைக்கு காரணமாக இருக்கலாம் என்பதோடு இருமல் மற்றும் மூச்சுத்திணறல் போன்ற நோய் அறிகுறிகள் காணப்படுமாயின் அது குறித்து கவனம் செலுத்துமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

## நாளை ஜப்பான் செல்கிறார் ஜனாதிபதி

ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேயின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட இலங்கை தூதுக்குழுவினர் நாளை இரவு ஜப்பான் செல்லவுள்ளனர். இந்த விஜயத்தின் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா மற்றும் ஜப்பானிய அரசாங்கத்தின் உயர்மட்ட அதிகாரிகளை சந்தித்தும் கலந்துரையாடவுள்ளார். ஜப்பானின் நீண்ட காலம் பிரதமராக இருந்த 67 வயதான ஷின்சோ அபே, கடந்த ஜ•லை 8ஆம் திகதி இடம்பெற்ற அரசியல் கட்சி பிரச்சாரக் கூட்டத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்நிலையில் அடுத்த வாரம் இடம்பெறும் ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேயின் இறுதிச் சடங்கில் இந்திய பிரதமர் நரேந்திர மோடியும் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முக்கிய இடங்கள் அதி உயர் பாதுகாப்பு வலயங்களாக பிரகடனம்

கொழும்புமாவட்டத்தில்உள்ளஅதிமுக்கியமானஇடங்கள் அதி உயர் பாதுகாப்பு வலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் நேற்று (வெள்ளிக்கிழமை) இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி புதுக்கடை நீதிமன்ற தொகுதியில் உயர்நீதிமன்றம் மற்றும் அதனை அண்மித்த பகுதிகள், ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, கடற்படை தலைமையகம், பொலிஸ் தலைமையகம், பாதுகாப்பு அமைச்சு மற்றும் இராணுவ தலைமையகம் பிரதமர் அலுவலகம், அலரிமாளிகை மற்றும் அதனை அண்மித்த பகுதிகள் பாதுகாப்பு செயலாளர் மற்றும் முப்படை தளபதிகளின் உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள் , பாராளுமன்ற கட்டடத் தொகுதி மற்றும் அதனை அண்மித்த பகுதிகள், இருக்கும் பகுதிகள் இவ்வாறு அதிவுயர் பாதுகாப்பு வலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடதக்கது.

## நங்கூரமிட்டுள்ள நான்கு எரிபொருள் கப்பல்கள்

கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ள நான்கு எரிபொருள் கப்பல்களுக்கான பணத்தை உடனடியாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக வலுச்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. இரண்டு டீசல் கப்பல்கள், ஒரு பெற்றோல் கப்பல் மற்றும் ஒரு மசகு எண்ணெய் கப்பல் ஆகியனவே துறைமுத்தில் நங்கூரமிட்டுள்ளன. இதேவேளை, கொழும்பு துறைமுகத்தில் பல வாரங்களாக நங்கூரமிடப்பட்டிருந்த 3 எரிபொருள் கப்பல்களுக்கு அண்மையில் பணம் செலுத்தப்பட்டதை அடுத்து, எரிபொருள் இறக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பால்,முட்டை க்கும் பாரிய தட்டுப்பாடு ஏற்படும்

விலங்கு தீவனம் பற்றாக்குறையினால் பால் மற்றும் முட்டை,கோழி இறைச்சி தொழிற்துறை வீழ்ச்சியடைந்துள்ளது. எதிர்வரும் நாட்களில் பால்,முட்டை ஆகியவற்றுக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்படும் என விவசாயத்துறை மற்றும் வனஜீவராசிகள் பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். பேராதனை விலங்கு உணவு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் முன்னேற்றம் தொடர்பிலான மீளாய்வு கூட்டத்தில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது, கோழி மற்றும் இறைச்சி உற்பத்தியில் நாடு தன்னிறைவடைந்திருந்தது. இருப்பினும் தற்போது அந்த தொழிற்துறை முழுமையாக வீழ்ச்சியடையும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. விலங்கு மற்றும் கோழிகளுக்கான தீவன இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்டதால் மோசமான பாதிப்பை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

## 90 சதவீத அழகு நிலையங்கள் மூடப்படும் அபாயம்

தற்போது 90 சதவீத அழகு நிலையங்கள் மூடப்படும் அபாயத்தில் உள்ளதாக அழகுக்கலை நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். இறக்குமதிக்கு சில கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதால் அழகு சாதனத்துறையில் ஏற்படும் பாதிப்புகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று (23) நடைபெற்றது. அங்கு உரையாற்றிய அழகுக்கலை நிபுணர் ஜெக்கி அபோன்சு, "அழகு நிலையங்கள் 90 சதவீதம் மூடப்படும் அபாய நிலையை எட்டியுள்ளன. இலங்கைக்கு பல பொருட்களை கொண்டு வருவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டதே இதற்குக் காரணம். இந்த பொருட்களை 6

02

## மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானம் சமர்ப்பிப்பு

சர்வதேச மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான பிரேரணையை ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் சமர்ப்பித்துள்ளார். 51ஆவது மனித உரிமைகள் கூட்டத்தொடருடன் இணைந்து இலங்கை தொடர்பான பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது. இதனால், இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் பொருளாதார நெருக்கடி, உணவுப் பாதுகாப்பு, உணவு, மருந்து மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

## ஆசிய அபிவிருத்தி வங்கியின் வருடாந்த மாநாட்டில் மேலும் உதவிகோரத் தயாராகும் ஜனாதிபதி

68 உறுப்பு நாடுகளைக் கொண்டு ஆசிய அபிவிருத்தி வங்கியின் 57 ஆவது மாநாட்டில் கடன் மறுசீரமைப்பிற்கு ஆதரவை கோர, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்பார்த்துள்ளார். பிலிப்பைன்ஸின் மணிலா நகரில் எதிர்வரும் 26ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை இந்த மாநாடு இலங்கையின் தலைமைத்துவத்தின் கீழ் நடைபெறவுள்ளது. இந்த ஆண்டு இலங்கையில் நடைபெறவிருந்த இந்த மாநாடு, நாட்டின் பொருளாதார மற்றும் நெருக்கடியான சூழ்நிலை காரணமாக

02

## வடிகானிலிருந்து உயிருடன் சிசு மீட்பு

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஸ்டேஷன் வட்டகொட பகுதியிலுள்ள வடிகான் ஒன்றிலிருந்து இன்று அதிகாலை 5.30 மணியளவில் நிறை மாத சிசு ஒன்று மீட்கப்பட்டுள்ளது. குறித்த வீதியூடாக சென்ற சிலர் சிசுவை கண்டு பொலிஸாருக்கு தகவலை வழங்கியுள்ளனர். பின்னர் சிசு லிந்துலை பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில், குறித்த சிசு உயிருடன் இருப்பதாக வைத்திய சாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். சிசுவை நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கான நடவடிக்கை எடுக்கவுள்ளதாக வைத்தியசாலையின் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

02


கிழக்கு மண்ணிலிருந்து நாளாந்தம் வெளிவரும்
சுபீட்சம் தினசரி மின்னிதழில் மிகவும் குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்யுங்கள்.
தொடர்புகளுக்கு : 077 6645232, 075 2331738
supeedsam@gmail.com

## வடிகானிலிருந்து உயிருடன் சிசு மீட்பு

சிசு தொடர்பான மேலதிக விபரங்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை என்றும் சம்பவம் தொடர்பான விசாரணைகளை தளவாக்கலை பொலிஸார் முன்னெடுத்து வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.சம்பவத்துடன் தொடர்புடைய தாய் இனம் காணப்பட்டுள்ளார். குறித்த நபர் திருமணமாகாத 21 வயதுடைய பெண் ஆவார். இவர் வட்ட கொடை கீழ் பிரிவை வசிப்பிடமாக கொண்டவர் என்றும் சிகிச்சைகளுக்காக அவரை தற்போது லிந்துலை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் கொட்டக்கலை பிரதேச பொது சுகாதார வைத்திய அதிகாரி சுதர்சன் தெரிவித்தார்.

## 90 சதவீத அழகு நிலையங்கள் மூடப்படும் அபாயம்

மாதங்களுக்கு ஒருமுறை புதுப்பிக்க வேண்டும். நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் எங்களது சீசன் தொடங்கும்.” “இப்போது நாம் இந்த தயாரிப்புகளை இறக்குமதி செய்ய வேண்டுமானால், இந்த மாத இறுதிக்குள் இந்த கட்டுப்பாடுகள் அகற்றப்பட வேண்டும். இதை இறக்குமதி செய்ய சுமார் 45 முதல் 60 நாட்கள் ஆகும்.” “இந்த துறையில் 4 லட்சம் ஊழியர்கள் உள்ளனர். இவ்வாறான நிலை தொடர்ந்தால் 75மூ முதல் 80மூ வரை ஊழியர்கள் குறித்த துறையில் இருந்து விலக வேண்டி ஏற்படும்” எனவும் அழகுக்கலை நிபுணர் ஜெக்கி அபோன்சு தெரிவித்தார்.

## ஆசிய அபிவிருத்தி வங்கியின் வருடாந்த மாநாட்டில் மேலும் உதவிகோரத் தயாராகும் ஜனாதிபதி

பிலிப்பைன்ஸில் நடைபெறவுள்ளது. 2016 ஆம் ஆண்டு அப்போதைய நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க விடுத்த கோரிக்கைக்கு அமைய நிதியமைச்சர் பதவி இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி அமைச்சராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செயற்படவுள்ளார்.

# தேசிய பேரவையில் இணைந்து கொண்டுள்ளமை மக்களை ஏமாற்றும் செயற்பாடு - சாணக்கியன்

தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்படாதுள்ள நிலையில், சி.வி விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் தேசிய பேரவையில் இணைந்து கொண்டுள்ளமையானது தமிழ் மக்களை ஏமாற்றும் ஒரு செயற்பாடு என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விசனம் வெளியிட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை இன்றைய தினமும் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இன்றைய தினம் பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை களுத்துறையில் முன்னெடுக்கப்பட்டிருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் தலைமையிலான இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், ராஜித்த சேனாரத்ன மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா, சர்வமதத் தலைவர்கள், பொதுமக்கள் என பலரும் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர். இதன்போது ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே இரா.சாணக்கியன் மேற்கண்டவாறு விசனம் வெளியிட்டுள்ளார். சி.வி விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் அரசாங்கத்துடன் இணைந்து வேலை செய்வதானது தமிழ் மக்களின் எதிர்காலத்திற்கு பாதிப்பினை ஏற்படுத்தும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். பயங்கரவாத தடை சட்டத்தினை நீக்குமாறு வலியுறுத்தி இலங்கை தமிழரசு கட்சியின் ஏற்பாட்டில் காங்கேசன்துறை முதல் ஹம்பாந்தோட்டை வரையில் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

## மகாசங்கத்தினருக்கு, ஜனாதிபதியால்

நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது எமது பொறுப்பாகும். பௌத்த விகாரைகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட ஏனைய மத மற்றும் சமூக சேவை நிறுவனங்கள் 42 950 பிரதான மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு இவற்றுக்காக 91 மில்லியன் மின் அலகுகள் வழங்கப்பட்டுள்ளன. தற்போதைய மின் கட்டண முறைமையின் கீழ் சாதாரண மின் அலகொன்றுக்கு 7 ரூபாய் 17 சதம் அறவிடப்படுகிறது. இதே வேளை சகல மதத் தலங்களுக்கும் மின் அலகொன்றுக்கு 11 ரூபா 46 சதம் அறவிடப்படுகிறது. தற்போது பௌத்த விகாரைகள் மற்றும் ஏனைய பதிவு செய்யப்பட்ட மத மற்றும் சமூக சேவை நிறுவனங்கள் 15 527 இல் மாதத்திற்கு 30 அலகுகளுக்கும் குறைவாகவே மின் பாவனை காணப்படுகிறது. இதே போன்று 9441 மத தலங்கள் உள்ளிட்டவை 31 – 90 க்கு இடைப்பட்ட மின் அலகுகளையும் , மேலும் 3274 மத தலங்கள் உள்ளிட்டவை 91 – 120 அலகுகளையும் , மேலும் 4972 மத தலங்கள் உள்ளிட்டவை 121 – 180 மின் அலகுகளையும் பயன்படுத்துகின்றன. பௌத்த விகாரைகள் மற்றும் ஏனைய பதிவு செய்யப்பட்ட மத மற்றும் சமூக சேவை நிறுவனங்கள் 33 214 இல் புதிய மின் கட்டண திருத்தத்திற்கமைய மாதாந்தம் செலுத்தப்பட வேண்டியுள்ள அதிகூடிய மின் கட்டணம் 4000 ரூபாவாகும். இதனை விட அதிக கட்டணத்தை செலுத்த வேண்டியேற்பட்டுள்ளமை 180 மின் அலகுகளை விட அதிக மின்சாரத்தை பாவிக்கும் 9800 மத வழிபாட்டு தளங்களுக்கு மாத்திரமேயாகும். அதன்படி, 180 அலகிற்கு குறைவாக மின்சாரம் பயன்படுத்தும் விகாரைகள் அல்லது பிற மத வழிபாட்டுத் தலங்கள் என்றும், 180 அலகிற்கு மேல் மின்சாரம் பயன்படுத்துபவை என்றும் இரண்டு வகையாகக் கண்டறியலாம். புதிய மின்கட்டண திருத்தத்தால், 180 அலகிற்கு மேல் அதிக மின்சாரம் பயன்படுத்தும் இடங்கள் பாதிக்கப்படுவது உண்மைதான். எனவே அதிகளவான மின்சாரத்தை பாவிக்கும் மதத் தலங்களில் எவ்வாறு மின்சாரத்தை முகாமைத்துவம் செய்வது என்பதற்கான பயிற்சிகளை வழங்குவதற்கும் , அதிக மின்சார தேவை காணப்படுகின்ற வழிபாட்டு தளங்களில் சூரிய மின் உற்பத்தி களங்களைப் பொறுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# அரச காணிகள் தொடர்பான சட்டங்கள் மற்றும் சுற்றுநிருபங்களை தெளிவூட்டும் பயிற்சி




மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலகங்களின் காணி பிரிவில் கடமையாற்றும் உத்தியோகஸ்தர்களுக்கு அரச காணிகள் தொடர்பான சட்டங்கள் மற்றும் சுற்றுநிருபங்களை தெளிவூட்டி வழிகாட்டும் ஒருநாள் பயிற்சி மட்டக்களப்பு மாவட்ட செயலக மண்டபத்தில் மாகாண காணி ஆணையாளர் டீ.எம்.ஆர்.சி.தசநாயக தலைமையிலும் மாவட்ட அரசாங்க அதிபர் க .கருணாகரன் அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் நேற்று (23) இடம்பெற்றது.

காணி பிரிவில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் சவால்களுக்கு தீர்வு மற்றும் தெளிவூட்டல்கள் வழங்கப்பட்டதுடன், பாமர மக்களுக்கு காணிகள் தொடர்பான விளக்கங்கள் மற்றும் விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவது காணி பிரிவில் கடமையாற்றும் அலுவலரின் பொறுப்பாகும் என இங்கு சுட்டிக்காட்டப்பட்டது. இவ் நிகழ்விக்கான அனுசரணையை ருவேஉஊசு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கதுக்கும் . கிழக்குமாகாண விதிஅபிவிருத்தி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ஏ.எச்.எம்.அன்ஸார்,மேலதிக அரசாங்க அதிபர் (காணி) நவரூபரஞ்சனி முகுந்தன், கிழக்குமாகாண உதவி காணி ஆணையாளர் ஜி.ரவிராஜன், ருவேஉஊசு நிறுவனத்தின் சிரேஷ்ட திட்ட முகாமையாளர் ரமேஷ்,திருமதி கே.ஈஸ்வரன்,காணி உத்தியோகஸ்தர்கள் காணி வெளிவிவகார போதனாசிரியர்கள்,அபிவிருத்தி உத்தியோகத்தர் என பலரும் கலந்து கொண்டனர்.

# திருகோணமலையில் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க தமிழர் பேரவை முன்னிற்கும்



**ஹஸ்பர்**

திருகோணமலையில் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை பாதுகாப்பதற்கு சரியான தலைமைத்துவமோ அமைப்போ இல்லாமல் இருப்பது துரதிஷ்டவசமே என தமிழர் பேரவை அமைப்பின் புதிய அங்குரார்ப்பண வைபவம் திருகோணமலையில் நேற்று (23)இடம் பெற்ற போதே அதன் செயற்பாட்டாளர்கள் கூட்டாக தெரிவித்தனர்.

தமிழர் பேரவையின் அங்குரார்ப்பண வைபவம் 15 செயற்பாட்டாளர்களை கொண்டு ஆரம்பிக்கப்பட்டது இதன் போது ஊடகங்களுக்கு கூட்டாக அதன் செயற்பாட்டாளர்கள் கோரிக்கையை முன்வைத்தனர் தமிழ் மக்களுடைய பல பிரச்சினைகள் இங்கு உள்ளது காணி கல்வி சமூகம் கலை கலாசாரம் வரலாறு போன்றன இதனை ஒரே குரலில் வெளிக்கொண்டு வருவதற்காக இந்த பேரவையை உருவாக்கியுள்ளோம் இதற்காக அனைவரும் ஒரே குரலில் ஒன்றினைந்து இனமதமுரண்பாடுகளற்றவகையில் உரிமைகளை பாதுகாக்க பல நடவடிக்கைகளில் செயற்படவுள்ளோம். நாளாந்தம் எமது சமூகம் பல தரப்பட்ட பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றது இதற்கானதீர்வு திட்டமொன்றைமுன்வைக்க வேண்டிய தேவை உள்ளது மக்களுடைய பிரச்சினைகளை நாமே முன்னின்று பாதுகாக்க வேண்டும் எனவும் தெரிவித்தனர்



நிதியுதவி
NH INVESTMENT & SECURITIES

# தேர்தல் பிரதிநிதியை தெரிவு செய்ய வாக்களித்ததுடன் கடமை முடியவில்லை

# தீர்மானங்கள் வரை பங்களிப்பு உண்டு வாக்காளருக்கு

## அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல



(வாஸ் கூஞ்ஞ)

நாம் வாக்களித்து முடிந்தவுடன் நினைக்கின்றோம் எமது கடமைகள் இத்துடன் முடிந்து விட்டது என்று. ஆனால் உண்மையான ஜனநாயகம் என்பது நாம் அரசியல் பிரதிநிதியை தெரிவதிலிருந்து அரசாங்கம் எடுக்கின்ற தீர்மானங்கள் வரை எமது பங்களிப்பு இருக்க வேண்டும் ஆனால் இந்த நடைமுறை இங்கு இல்லையென மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல் இவ்வாற தெரிவித்தார்.

முன்மொழியப்பட்ட பாராளுமன்ற தெரிவுக்குழு தீர்மானங்களை முறைப்படுத்துவதற்காகவும், மக்கள் மயப்படுத்துவதற்காகவும், தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் தேர்தல் சட்டங்கள் மற்றும் சீர்திருத்தங்கள் தொர்பிலான தொடர் கலந்துரையாடல் மன்னாரில் வியாழக்கிழமை (22) நடைபெற்றபோது மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல் தொடந்து இங்கு உரையாற்றுகையில்

தேர்தல் ஆணைக்குழுவானது ஜனநாயக ரீதியில் தேர்தலை நடாத்துவதற்காக மக்களின் கருத்துக்களை கேட்கும் முகமாக மாவட்டங்கள் தோறும் இவ்வாறான கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றது. இதற்கமைய மன்னாருக்கும் இவ் குழு வருகை தந்துள்ளது. ஜனநாயக ரீதியிலான அரசியல் இவ்வாறு ஜனநாயக ரீதியிலான தேர்தல் நடைபெற வேண்டும் என்பதே இவ் தேர்தல் ஆணைக்குழுவின் நோக்கமாக இருக்கின்றது.

மொறிஸ் என்ற அறிஞர் சொல்லுகின்றார் நம்பிக்கை இரண்டு விதமாக இருக்கின்றது ஒன்று சமூக நம்பிக்கை மற்றையது அரசியல் நம்பிக்கை. சமூக நம்பிக்கை என்பது எமது பெற்றோர் உற்றார் நண்பர்கள் என இவ்வாறு. அரசியல் நம்பிக்கை என்பது அரசு அரசாங்கம் அரசியல்வாதிகள் தேர்தல் திணைக்களம் இவ்வாறான அரசியலோடு சம்பந்தமானவையாகும். மக்கள் அரசியலில் பங்கேற்பது ஜனநாயகத்தின் மிகவும் முக்கியமான பங்கு.

ஜனநாயகம் என்பது மக்கள் மக்களை மக்களுக்காக மக்களை ஆழுதல் என்பதை ஜனநாயகம் என சொல்லுகின்றோம். நம்பிக்கை என்பது அரசியல்வாதிகள் அரசு அரசாங்கம் இவற்றில் நாம் வைக்கும் நம்பிக்கையே ஜனநாயகத்தை கட்டியெழுப்பும். நாம் பிரதிநிதிகளை தெரிவு செய்கின்றோம் இது எமக்கு வழங்கப்பட்ட ஒரு பெறுமதியான சுதந்திரம். நாம் வாக்களித்து முடிந்தவுடன் நினைக்கின்றோம் எமது கடமைகள் இத்துடன் முழ்ந்து விட்டது என்று. ஆனால் உண்மையான ஜனநாயகம் என்பது நாம் அரசியல் பிரதிநிதியை தெரிவதிலிருந்து அரசாங்கம் எடுக்கின்ற தீர்மானங்கள் வரை எமது பங்களிப்பு இருக்க வேண்டும்.

நாம் தெரிந்து எடுத்து பாராளுமன்றம் அனுப்பும் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் எடுக்கப்படும் தீர்மானங்களை மக்கள் மத்தியில் முன்னிலைப்படுத்தி அதற்கு ஆதரவு அல்லது ஆதரவுன்மை அளிக்கும் முறை கிடையாது. ஆனால் நாம் அனுப்பிய பிரதிநிதியில் நம்பிக்கை வைத்துள்ளோம். புலம்பெயர்ந்தோர் நோர்வேயிலிருந்து தெரிவிக்கின்றனர் ஆசிய நாடுகளுக்கு ஒரு சாபம் என தெரிவிக்கின்றனர். அதாவது யாரிடம் பணம் அதிகமாக இருக்கின்றதோ அவர்கள்தான் அரசியல் வாதிகளாக வர முடியும் என்று.

இதற்கு நோர்வேயின் நடைமுறை அரச ஊழியர்களுக்கு அதிகரிக்கப்பட்ட சம்பளத்தை வழங்கி வருகின்றது. சிங்கபூரை கட்டி எழுப்பின லீக்குவான் சிங் இலங்கைக்கு வந்தவர் இலங்கையை பார்த்துவிட்டு தானும் சிங்கபூரை குறுகிய காலத்தில் சிங்கபூரை இவ்வாறு கட்டியெழுப்புவேன் என சென்றார். ஆனால் இன்று நாம் வேலைத்தேடி சிங்கபூருக்கு செல்லும் நிலை உருவாகி விட்டது. தலைமைத்துவம் சிறப்பாக இருக்க வேண்டும். லீக்குவான் சிங் சிங்கபூரில் பல இன மக்கள் வாழுகின்றபோதும் அங்கு தேசிய மொழியாக ஆங்கிலத்தை கொண்டு வந்தார்.

இவர் சீனா காரராக இருந்தும் சீனா நாட்டு மக்கள் அங்கு அதிகமானோர் வாழ்ந்தபோதும் சீனா மொழியை தெரிந்தெடுக்காது தூரநோக்கு சிந்தனையில் ஆங்கிலத்தை கொண்டு வந்தமையால் இன்று அந்த நாடு நன்கு கட்டியெழுப்பப்பட்ட நாடாக காணப்படுகின்றது. 1956 ஆம் ஆண்டு அவர் இலங்கைக்கு வந்தபொழுது இங்கு தனி மொழி சட்டத்தால் நடந்த சம்பவங்களை நேரடியாக பார்த்தபோதே அவருக்கு தூரநோக்கு செயல்பாடு ஏற்பட்டதாகவும் சொல்லப்படுகின்றது. இவ்வாறு மக்களுக்காக சிந்திக்கக்கூடிய நல்ல பிரதிநிதிகளை நாம் தெரிவு செய்ய வேண்டும்.

பெண்களுக்கு அரசியல் அமைப்பில் பெரும் பங்கு தேவையென கூறப்படுகின்றது. உள்ளூராட்சி மன்றங்களில் 25 வீதம் பெண்கள் இருக்க வேண்டும் என தெரிவித்தும் பிரதிநிதித்துவத்தில் குறைவாகவே காணப்படுகின்றனர். இலங்கையில் பெண் பிரதமராக ஜனாதிபதியாக இருந்துள்ளனர். நன்கு படித்த பண்புள்ள பெண்கள் இருக்கின்றார்கள் இவர்கள் அரசியலுக்குள் வர அச்சம் கொள்ளுகின்றார்களோ தெரியவில்லை இது மாற்றம் பெற வேண்டும். இவ்வாறு பெரியோரின் அனுபவம் இளைஞர்களின் துடிப்பு பெண்களுக்கான உயர்வான தன்மை இவ்வாறு ஒன்றிணைந்த அரசியல் பிரதிநிதிகள் உருவாக வேண்டும் என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல் இவ்வாறு தெரிவித்தார்.

# யானை தாக்கி குடும்பஸ்தர் மரணம்

(வாஸ் கூஞ்ஞ)

வீட்டின் தேவைகளுக்காக விறகு சேகரிப்பதற்காக வீட்டிலிருந்து சிறிது தூரம் காட்டுக்குள் சென்றவர் யானை தாக்கி ஸ்தலத்திலேயே தனது உயிரை போக்கிக் கொண்ட சம்பவம் மன்னார் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இவ் சம்பவம் வெள்ளிக்கிழமை (23.09.2022) பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மன்னார் முசலி மரண விசாரணை அதிகாரி ஏ.ஆர்.நஸீர் இறந்தவரின் மனைவி ஸஸரான்லி சகாய மேரியை (வயது 54) விசாரனை மேற்கொண்ட மரண விசாரனையிலிருந்து தெரிய வருவதாவது

மடு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள சின்னப்பண்டிவிரிச்சான் பகுதியில் வசித்து வந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான பபா என அழைக்கப்படும் கிறிஸ்தோப்பர் ஸ்ரான்லி (வயது 54) சம்பவம் அன்று பிற்பகல் ஐந்து மணியளவில் தனது வீட்டுக்குத் தேவையான விறகுகளை சேகரிப்பதற்காக வீட்டின் அருகாமையிலுள்ள அடர்ந்த காட்டுக்குள் சென்றுள்ளார்.

பொழுது சாய்ந்தும் இவரை காணாத மனைவி தேடிச் சென்றதாகவும் பின் அயலவர்களின் உதவியை நாடி காட்டுக்குள் சென்று தேடிய போது வீட்டிலிருந்து சுமார் ஐந்நூறு மீற்றர் தூரத்திலுள்ள காட்டுக்குள் இவர் யானையினால் தாக்கப்பட்ட நிலையில் இறந்து கிடந்தாகவும்



ஆந்நேரத்தில் அப்பகுதியில் யானை கூட்டம் ஒன்று நிற்பதை சென்றவர்கள் கண்டுணர்ந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறந்தவரின் சடலம் மன்னார் பொது வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு மரண விசாரனைக்கும் பிரேத பரிசோதனைக்கும் உட்படுத்தப்பட்டு பின் உறவினர்களிடம் கையளிக்க மரண விசாரனை அதிகாரியால் பொலிசாருக்கு கட்டளை வழங்கப்பட்டது.

# இலவச வைத்திய முகாம்



ஹஸ்பர்

திருகோணமலை,முள்ளிப்பொத்தானை ஆரம்ப சுகாதார பராமரிப்பு பிரிவின் "ஒளி" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இலவச வைத்திய முகாம் ஒன்று இன்று (24) சிராஜ் நகர் முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் இடம் பெற்றது. இதில் 35 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்குமாக இரத்த பரிசோதனை, காது,பல் ,கண் பரிசோதனை உட்பட நீரிழிவு, இருதய நோய், புற்று நோய், சிறு நீரக நோய் போன்ற தொற்றா நோயில் இருந்து பாதுகாக்கவும் இலவச மருத்துவ சேவை இடம் பெற்றது.

"வரும் முன் காப்போம் என்ற தொனிப் பொருளின் கீழ் இடம் பெற்ற குறித்த வைத்திய முகாமில் சிராஜ் நகர் கிராம சேவகர் ஏ.முனாஸ் உட்பட வைத்தியர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# வொலிவோரியன் கிராமத்துக்கு மையவாடி பிரதேச செயலாளருக்கு மகஜர் கையளிப்பு



நூருள் /ஹுதா உமர்

சாய்ந்தமருது பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட வொலிவோரியன் கிராமத்துக்கான மையவாடியை அமைத்து தர உரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தி பிரதேச செயலாளருக்கு பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொது மக்களால் மகஜர் கையளிக்கப்பட்டு உள்ளது. லக்ஸ்டோ மீடியா ஊடக வலையமைப்பின் முன்னெடுப்பில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை சாய்ந்தமருது பிரதேச செயலகத்துக்கு நேரில் சென்று முறைப்பாடு மேற்கொண்டனர்.

பொதுநல செயற்பாட்டாளரும், பல்துறை கலைஞரும், வொலிவோரியன் கிராமத்தை சேர்ந்தவருமான அஹமட் லெப்பை அன்ஸார் தலைமையில் சென்ற இவர்கள் உதவி பிரதேச செயலாளரை சந்தித்து பேசினர்.

வொலிவோரியன் கிராமத்தில் மையவாடி அமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து பிரதேச செயலாளராக ஏ.எல்.எம். சலிம் பதவி வகித்தபோது ஒதுக்கி கொடுக்கப்பட்ட இடத்தில் தற்போது மடுவம் அமைக்க சில முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன, இதை அனுமதிக்க கூடாது என்று உதவி பிரதேச செயலாளருக்கு அன்ஸார் எடுத்து சொன்னார்.

பிரதேச செயலாளரின் சார்பாக உதவி பிரதேச செயலாளர் மகஜரை பெற்று கொண்டார்.

# கல்வி அமைச்சின் முஸ்லிம் பாடசாலைகள் பணிப்பாளர் மேஜர் நசிமுதீன் விஜயம்





(வி.ரி. சகாதேவராஜா)

கல்வி அமைச்சின் முஸ்லிம் பாடசாலைகள் பிரிவின் பணிப்பாளர் மேஜர் நசிமுதீன் கடந்த வாரம் அம்பாறை மாவட்ட தேசிய பாடசாலைகளுக்கு விஜயம் செய்து கள ஆய்வை மேற்கொண்டார். அந்தந்த வலயக்கல்விப் பணிமனையின் கல்வி சார் உத்தியோகத்தர்களுடன் இணைந்து இந்த ஆய்வை மேற்கொண்டார்.

இறுதியாக கடந்த வெள்ளிக்கிழமை அன்று சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி தேசிய பாடசாலைக்கு விஜயம் செய்து கள ஆய்வை மேற் கொண்டார்.இதன்போது கிழக்கு மாகாண கல்வி திணைக்கள உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிறிதரன் மற்றும் சம்மாந்துறை வலய கல்வி பணிப்பாளர் எஸ் எம் எம் அமீர் தலைமையிலான குழுவினரும் ஆய்வில் கலந்து கொண்டனர். இதன் பூரண அறிக்கை கல்வி அமைச்சில் சமர்ப்பிக்கப்பட இருக்கின்றது என்று அவர் கூறினார்.

மட்டக்களப்பில் Multi Purpose Store
(களஞ்சிய) அறை வாடகைக்கு உண்டு



களஞ்சியத்தின் விஸ்தீரணம்
1512 சதுர அடி,
நீளம் 42 அடி,
அகலம் 35 அடி, உயரம் 18 அடி.
அலுவலக அறை 170 சதுர அடி,
குளியல் அறை,
மலசலகூடங்கள் 02,
நீர் வசதி, மின்சார வசதி,
போக்குவரத்து வசதி
(பிரதான வீதியில் அமைந்துள்ளது)
அமைவிடம்:
திருகோணமலை வீதி,
ஆறுமுகத்தான் குடியிருப்பு, மட்டக்களப்பு.
தொடர்புகளுக்கு: whatsapp: 0041 76 345 23 95

# கௌரவமான அரசியல் தீர்வை வலியுறுத்தி மயிலிட்டியில் போராட்டம்



**த.சுபேசன்**

தமிழ் மக்களுக்கான கௌரவமான அரசியல் தீர்வினை வலியுறுத்தி 23ஃ09 வெள்ளிக்கிழமை மயிலிட்டிப் பகுதியில் வடக்கு–கிழக்கு ஒருங்கிணைப்பு அமைப்பின் ஏற்பாட்டில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. நூறு நாள் செயல் முனைவுப் போராட்டத்தின் 54வது நாளில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.இதன்போது வலி வடக்கு மக்களின் காணி விடுவிப்பினை வலியுறுத்தியும் முட்கம்பி வேலி அமைத்து கவனயீர்ப்புப் போராட்டத்தினை முன்னெடுத்திருந்தனர்.குறித்த போராட்டத்தில் அரசியல் பிரமுகர்கள் ,சட்டத்தரணிகள்,சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் பங்கெடுத்திருந்தனர்.

# சர்வதேச சமுத்திர வளங்கள் பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு கரையோரத்தை சுத்தம் செய்யும் பணி






கழிவுகளைக் கடலுக்கு வெளியேற்றுவதால் திருகோணமலை நகர்சார் கரையோரத்தினுடையை எழில் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளருமான பி.எச்.என்.ஜயவிக்ரம தெரிவித்தார். சர்வதேச சமுத்திர வளங்கள் பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு நேற்று (23) திருகோணமலைப் பொது வைத்தியசாலைக்கு அருகாமையில் அமைந்துள்ள கரையோரப் பிரதேசத்தில் கரையோரம் தூய்மைப்படுத்தல் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்பிக்கையிலே மாவட்ட அரசாங்க அதிபர் மேற்குறித்தவாறு தெரிவித்தார்.

திருகோணமலை நகரம் சுற்றுலா நகரமாகக் காணப்படுகின்றது. பொது வைத்தியசாலை சார் கரையோரப் பிரதேசங்களில் திட்டமிடப்படாத முறையில் கழிவுகள் வெளியேற்றப்படுவதன் காரணமாக கரையோரம் மற்றும் சமுத்திரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. சுற்றுலாப் பிரயாணிகள் இப்பிரதேசத்துக்கு வருகை தருவதுடன் கடல் நீராடுகின்ற செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்றனர். எனவே இவ்வாறான கழிவுநீர் மற்றும் வைத்தியசாலைக் கழிவுகள் பாதுகாப்பற்ற முறையில் வெளியேற்றப்படல் காரணமாக இக்கரையோரம் வெகுவாகப் பாதிக்கப்படலாம். எனவே இக்கரையோரத்தைப் பாதுகாப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் உரிய திணைக்களங்கள், சிவில் அமைப்புகள், நலன்விரும்பிகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய தேவை காணப்படுவதாக இதன்போது அரசாங்க அதிபர் மேலும் தெளிவுபடுத்தினார்.

இப்பிரதேசத்தில் வைத்தியசாலை காணப்படுவதுடன் முன்னைய காலங்களில் வைத்தியசாலை மதில் அமைக்கப்பட முன்னர் வைத்தியசாலையினுடைய கழிவுகள் கரையோரத்திற்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது. இவ்வைத்தியசாலைக் கழிவுகளில் இருக்கக்கூடிய பொருட்கள் நீண்டகாலம் உக்காத பொருட்களாகக் காணப்படுவதுடன் மிக அபாயகரமான கழிவுகளாகவும் காணப்படுகின்றது.

கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளுடைய விளைவை தற்பொழுது நாம் அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. எனவே இன்றைய சூழலில் தற்போது இருக்கக்கூடிய சுற்றாடலைப் பேணிப் பாதுகாத்து எதிர்கால சந்ததியினருக்கு சாதகமாக வாழக்கூடிய சுற்றாடலை உருவாக்க வேண்டிய பொறுப்பு தற்போதைய பரம்பரைக்கே காணப்படுகின்றது. இப்பிரதேசத்திலிருக்கக்கூடிய மீனவர்கள் மற்றும் வைத்தியசாலை மூலமாக வெளியேற்றப்படுகின்ற கழிவுகள் காரணமாக கடல் வெகுவாகப் பாதிக்கப்படுவதுடன் அங்குள்ள மீன்வளம், கரையோரம் மற்றும் பவளப்பாறைகள் கூட பாதிப்பிற்குட்படும். இதனால் சுற்றாடலுக்கும் மனிதனுக்கும் பாரிய தீங்குகள் ஏற்படும். எனவே அவ்வாறான நிலைமையை கருத்திற்கொண்டு அனைவரும் பொறுப்புணர்வுடன் செயற்படவேண்டும் என்றும் இதன்போது அரசாங்க அதிபர் வேண்டிக்கொண்டார்.

கரையோரம்சார் பிரதேசங்களுக்கு கழிவுகளை வெளிற்றுவதன் மூலமாக சமுத்திரப்
பகுதிகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதன்காரணமாக மனிதனுக்குப் பாரிய தீங்குகள் ஏற்படலாம் உலகளவில் பொலித்தீன் கழிவுகளை கடலுக்கு வெளியேற்றுகின்ற நாடுகளில் இலங்கை 5ம் இடத்திலே காணப்படுகின்றது. அத்துடன் திருகோணமலையினுடைய கரையோரம் சார் பிரதேசங்களில் தூய்மைப்படுத்தல் செயற்பாடுகளைக் குறுகிய நேரத்துக்குள் மேற்கொள்கின்றபொழுது சுமார் 700கிலோகிராத்திற்கு மேற்பட்ட கழிவுகள் அப்புறப்படுத்தப்படுவதாக இதன்போது கருத்துரைத்த சமுத்திர சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபையின் வடகிழக்கு உதவி முகாமையாளர் வு. ஸ்ரீபதி தெரிவித்தார்.

சமுத்திர வளங்கள் பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு திருகோணமலை மாவட்டத்தினுடைய தெரிவு செய்யப்பட்ட கரையோரம் சார் பிரதேசங்களில் கடந்த சில நாட்களாக தூய்மைப்படுத்தல் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இலங்கைக் கடற்படை, இலங்கை பொலிஸார், துறைசார்ந்த நிறுவனங்கள், சிவில் அமைப்புகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் உட்பட பலர் இதற்கு தங்களுடைய ஒத்துழைப்பை வழங்கி வருகின்றனர். திருகோணமலை மாவட்ட சமுத்திர சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபையினுடைய ஒருங்கிணைப்பின் கீழ் இவ்வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இவ்வேலைத்திட்டத்தை சிறப்பாக முன்னெடுப்பதற்குத் தேவையான நிதியுதவியை இளைஞர் அபிவிருத்தி அகம் மற்றும் றந நகசநஉவ ஆகிய நிறுவனங்கள் நிதியுதவியை வழங்கின. இந்நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ். அருள்ராஜ், திருகோணமலை பொது வைத்தியாசலைப் பணிப்பாளர், திருகோணமலை நகரசபை செயலாளர், இலங்கைக் கடற்படை, இலங்கைப் பொலிஸார், வைத்தியசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், சிவில் அமைப்புகள் உட்பட பலரும் கலந்து கொண்டார்கள்.

# கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஊடான கலந்துரையாடல்





தம்பலகாமம் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிராம மற்றும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினருடனான நேரடி கலந்துரையாடல் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரின் ஏற்பாட்டில், பிரதேச செயலாளர் திருமதி.ஜெ.ஸ்ரீபதி அவர்களின் தலைமை தாங்கலுடன் கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களப் பணிப்பாளர் திரு. நா.தனஞ்ஜெயன் அவர்கள் பிரதம விருந்தினராகவும் மற்றும் தம்பலகாமம் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் திரு.இரா.பிரசாந்தன், மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு.எஸ்.பத்மராஜா, திட்டமிடல் கிளையின் சிரேஷ்ட முகாமைத்துவ உதவியாளர் திரு. ஜெ.நிகாத் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் நேற்று(23) பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் உரையாற்றிய பிரதேச செயலாளர், தற்போதைய பொருளாதார நெருக்கடியான சூழலில் இருந்து கிராமங்களை மீட்டெடுப்பதில் சங்கங்களுக்கு பாரிய பொறுப்பு காணப்படுகின்றது மேலும் சங்கங்கள் தமது செயற்பாடுகளை கிராம மட்டத்தில் விரிவுபடுத்த வேண்டும் எனவும் குறிப்பிட்டார்

தொடர்ந்து கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களப் பணிப்பாளர் அவர்கள் சங்கத்தின் செயற்பாடுகள் மற்றும் உணவுப் பாதுகாப்பினை கிராம மட்டத்தில் உறுதிப்படுத்த சங்கங்கள் எவ்வாறு செயற்பட வேண்டும் என ஆலோசனைகளை வழங்கி அது தொடர்பாக சங்க அங்கத்தவர்களுடன் கலந்துரையாடினார்.

# இன ஒற்றுமையை பாதிக்கின்ற, காணி அபகரிப்பு செயற்பாடுகளை உடன் நிறுத்த வேண்டும்

**பைஷல் இஸ்மாயில் -**



தற்போது நாட்டில் சிலர் வீரப்பேச்சுக்களை பேசித்திரிந்தாலும் பொருட்களில் விலைகளை கட்டுப்படுத்தமுடியாமல் இருப்பதாகவும், பொருட்களுக்கு பாரிய தட்டுப்பாடு நிலவுவதாகவும், சில பொருட்கள் மாபியா அடிப்படையில் விற்கப்படுவதாகவும், தற்போது வைத்தியசாலைகளில் மருந்து பொருட்கள், ஏனைய வசதிகள் பற்றாக்குறையாக காணப்படுவதால் மக்கள் தனியார் வைத்தியசாலையை நோக்கி செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இதன் காரணமாக மக்கள் பாரிய அளவில் கஸ்டப்படுவதாகவும் செவ்வாக்கிழமை (20) பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது பா உ இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், தற்போது மக்கள் பல துன்பங்கள், துயரங்கள் அடைந்துள்ள சந்தர்ப்பத்தில் திருகோணமலை மாவட்டத்தில் தோப்பூர் பிரதேசத்திற்குட்பட்ட இக்பால்நகர்,உல்லைக்குளம்காணிகளில்வாழும் தமிழ், முஸ்லிம் மக்களுடைய இன ஒற்றுமையை பாதிக்கின்ற வகையில் காணிப்பிரச்சினைகளை உருவாக்கி இன பிரச்சினைகளை உருவாக்க சில நாசக்கார சக்திகள் முயற்சிப்பதாகவும் அது உடன் நிறுத்தப்படவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

மேலும், குச்சவெளி பிரதேசத்திற்குரிய சில காணிப்பரப்புகளை கோமரன்கடவள பிரதேசத்திற்கு உள்வாங்குவதாக சொல்லி சில அதிகாரிகள் அளவிட அந்த இடங்களில் வருகின்ற போது மக்களுக்கிடையில் பிரச்சினை உருவாகுவதாகவும் இந்த நாடு சென்று கொண்டிருக்கின்ற இந்த சூழ் நிலையில் இன ஒற்றுமையைபாதிக்கின்றசெயற்பாடுகளைஉடன் நிறுத்த வேண்டும் எனவும் அதற்கு அரசாங்கம் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.




தமிழர் பேரவை என்ற அமைப்பு நேற்று மாலை (23) 5.00 மணிக்கு திருகோணமலையில் அங்குராப்பனம் செய்யப்பட்டது. இவ் அமைப்பின் தலைமை செயற்பாட்டாளராக ரே. ஜெரோம், நிர்வாக செயற்பாட்டாளராக செ. பிரேமரதன் தெரிவு செய்யப்பட்டதுடன், 13 முக்கிய உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (படங்கள் – அ . அச்சுதன்)

# 47 வது கிழக்கு மாகாண விளையாட்டு விழா









47 வது கிழக்கு மாகாண விளையாட்டு விழாவின் ஆரம்ப நிகழ்வுகள் நேற்றுமுந்தினம் (22) கந்தளாய் லீலாரத்ன மைதானத்தில் கோலாகலமாக ஆரம்பமானது. கிழக்கு மாகாண விளையாட்டுத்திணைக்களத்தின் பணிப்பாளர் என்.எம்.நௌபீசின் அழைப்பில் கிழக்கு மாகாண கல்வி, விளையாட்டு அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யு.ஜி.திசாநாயக்கவின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் கலந்து கொண்டார்.

திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்ட வீர வீராங்கனைகள், பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் நடுவர் குழாமின் விசேட அணிவகுப்பு மரியாதையும் இதன்போது இடம்பெற்றன. 300 க்கு மேற்பட்ட வீர வீராங்கனைகள் இதில் கலந்து கொள்கின்றனர். விளையாட்டு வீரர்கள் விளையாட்டு தொடர்பான சத்தியப்பிரமாணம்தை இதன்போது செய்துகொண்டார்கள்.

விளையாட்டு விழா ஆரம்பிப்பதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு வாசகம் கிழக்கு மாகாண ஆளுநரினால் வாசிக்கப்பட்டதும் போட்டிகள் ஆரம்பமான. இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம, கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் கலாமதி பத்மராஜா, கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், கிழக்கு மாகாண வீதியபிவிருத்தி அமைச்சின் செயலாளர் , திணைக்கள தலைவர்கள், அதிகாரிகள் உட்பட விளையாட்டு வீரர்களும் கலந்து கொண்டனர்.

# 9நூல்களின் அறிமுக விழா



**பைஷல் இஸ்மாயில் -**

மூதூர் – சேனையூர் அனாமிகா பண்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் பேராசிரியர் பாலசுகுமாரின் ஒன்பது நூல்களின் அறிமுக விழா எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை மெதடிஸ்த மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் (திருமதி) சரண்யா சுதர்சன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நூல் அறிமுக விழாவுக்கு கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மூ.கோபாலரத்தினம் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சேனையூர் கலம்பகம், கரைகள் கடந்து, **Eezha Natiyam> Inniyam & Music & Dance of Eazham Tamilians,** கறுப்பி, கொடி எழு அன்னப்புரவி, தமிழ் மரபில் சிவாஜி, கணேசனின் நடிப்பு ஈழ நாட்டியம், ஓ தோழனே நந்தினி, நஞ்சுமிழும் காளான்கள் என்ற இந்த 9 நூல்களின் அறிமுகமும் இதன்போது இடம்பெறவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# வரலாற்றுச் சாதனையை நிலைநாட்டிய முதலைக்குடா மாணவனுக்கு கௌரவிப்பு







மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தின் வரலாற்றில் முதன்முறையாக, மருத்துவத்துறைக்கு தெரிவாகும் வாய்ப்பினைப் பெற்றுள்ள ரவீந்திரன் யுவராஜ் என்ற மாணவனை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நேற்று(23) முதலைக்குடா மகா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

முதலைக்குடா மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில், குறித்த மாணவனுக்கு பொன்னாடை போர்த்தி, நினைவுச்சின்னம் வழங்கி கௌரவம் வழங்கப்பட்டது. இதன்போது, குறித்த மாணவனின் பெற்றோர்களும் பாராட்டப்பட்டதுடன், அதிபர், ஆசிரியர்கள் உள்ளிட்ட அனைவரினையும் பாராட்டினர். மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் ஆரம்பிக்கப்பட்டபின் முதன்முறையாக மருத்துவத்துறைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் வலயக்கல்விப் பணிப்பாளர் அகிலா கனகசூரியம், பிரதிக்கல்விப்பணிப்பாளர்களான த.யசோதரன், ந.குகதாசன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# மட்டு.மண்ணில் சிறுவனே சிறுவர் இலக்கியத்தை படைத்து வெளியீடு









மட்டக்களப்பு மாவட்டத்தின் சிவானந்த தேசிய பாடசாலையில் கல்வி பயில்கின்ற மேகராஜா தகீஸன் என்ற 12வயதுசிறுவனால்படைக்கப்பட்ட வண்ண எண்ணங்கள் என்ற சிறுவர் பாடல் நூல் வெளியீடு கடந்த(22) வியாழக்கிழமை, கல்லடியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது. இந்நூலின் முதற்பிரதியை பேராசிரியர் செ.யோகராசா பெற்றுக்கொண்டார். இந்நிகழ்வில் குறித்த பாடசாலையின் பிரதி அதிபரும் பங்கேற்றிருந்தமையுடன், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோரும் கலந்து கொண்டிருந்தனர்.

சிறுவர்களுக்கான இலக்கியங்களை இளைஞர்களும், முதியோர்களும் படைத்துவருகின்ற நிலையில், சிறுவர் இலக்கியத்தை சிறுவனே படைத்திருக்கின்றமை எடுத்துக்காட்டத்தக்கது. குறித்த சிறுவன் கவிஞர் மேராவின் மகன் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சமாதானத்தை வலியுறுத்தி அமைதி ஊர்வலம்




(அ . அச்சுதன்)

திருகோணமலை 3 ம் கட்டை பகுதியில் நிரந்தர சமாதானத்தை வலியுறுத்தி இன்று (24) 10.00மணியளவில் அமைதி ஊர்வலம் நடைபெற்றது. இறுதியில் நினைவாக சர்வோதய நிலயத்தில் மாமரம் நாட்டி வைக்கப்பட்டது.

அதனையடுத்து. சர்வோதய நிலயத்தில் கூட்டம் நடைபெற்றது. இதனை இளைஞர் அபிவிருத்தி அகம் அமைப்பின் இளைஞர் திட்ட பிரிவினர், சர்வோதய சர்வமதக்குழுவுடன் இணைந்து ஏற்பாடு செய்து நடத்தியது.

இது உலக சமாதான தினத்தை முன்னிட்டு நடைபெற்றது.

இங்கு சமாதானத்தை இளைஞர்கள் எவ்வாறு நிரந்தரமாக்கமுடியும் என்பது பற்றி இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ, பௌத்த மத குருமார் கருத்துக்களை முன்வைத்தார்கள்.

# பெண்களுக்கு எதிரான வன்முறைக்கு எதிரான ஆர்பாட்டம்



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி பிரதேச செயலாளருக்கு எதிராக களுவாஞ்சிக்குடி பிரதேச சபையின் உறுப்பினர் கடந்த 15-09-2022 அன்று பிரதேச சபை அமர்வின் போது அனாகரியமான முறையில் நடந்து கொண்டார் என்பதற்கு எதிராகவே இந்த ஆர்பாட்டம் (23) நடைபெற்றது. அரச உத்தியோத்தருக்கு எதிராக அச்சுறுத்தல் விடுக்கின்ற வகையிலும் பெண் உத்தியோகத்தர் என்று இழக்காரமான எண்ணத்துடன் அசிங்கமான வார்த்தை பிரயோகங்களை நாகரிகமற்ற முறையில் சபையில் கூச்சல் இட்டமை ஒரு அரசியல் செயற்பாட்டாளருக்கு அப்பால் காட்டுமிராண்டிதனத்தினை அவ்விடத்தில் பிரதிபலித்தமை குறிப்பிடத்தக்கது.

இனிவருங் காலங் களில் பெண்களுக்கு அச்சுறுத்தும் வகையிலான செயல்பாடுகளை இவர்கள் கைவிட்டு மக்களின் அபிவிருத்தி செயல்பாடுகளில் நாட்டத்தினை முன் எடுக்கப்படவேண்டும் என ஆர்ப்பாட்ட காரர்களினால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

பெண்களுக்கெதிரான நாகரிகமற்ற வார்த்தை பிரயோகத்தினை உபயோகித்திருந்த பிரதேச சபை உறுப்பினருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்குமாறும் மற்றும் பெண்களுக்கு எதிராக அவதூறு பேசிய பிரதேச சபை உறுப்பினருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையினை எடுக்குமாறும் கோரி பெண்ணமைப்பினரால் கோரிக்கை விடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# ஹெரோயின் போதைப்பொருளை மோட்டார் சைக்கிளில் கடத்தி சென்ற சந்தேக நபர் கைது



பாறுக் ஷிஹான்

ஹெரோயின் போதைப்பொருளை மோட்டார் சைக்கிளில் கடத்தி சென்ற சந்தேக நபரை கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர். அம்பாறை மாவட்டம் கல்முனை விசேட அதிரடிப்படை முகாமிற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றினை அடுத்து வெள்ளிக்கிழமை (23) மாலை நிந்தவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அக்கரைப்பற்று -கல்முனை பிரதான வீதி செயின் வீதி சந்தியில் வைத்து சந்தேக நபர் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட தேடுதலில் கைதானார்.

இவ்வாறு கைதான நபர் நிந்தவூர் 09 பிரிவினை பகுதியை சேரந்த 18 வயது மதிக்கத்தக்கவர் என்பதுடன் சந்தேக நபர் வசம் இருந்து ஹெரோயின் போதைப்பொருள் 04 கிராம் 200 மில்லிகிராம், சந்தேக நபர் செலுத்தி வந்த ஹொன்டா ரக மோட்டார் சைக்கிள் ,ஒரு தொகுதி பணம் என்பன விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இச்சோதனை நடவடிக்கையின் போது விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜெயசுந்தரவின் பணிப்புரைக்கமைய அம்பாறை வலயக்கட்டளை அதிகாரி சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சில்வெஸ்டர் விஜேசிங்கவின் அறிவுறுத்தலுக்கமைய மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் டி.சி வேவிடவிதான ஆகியோரின் வழிகாட்டலில் கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ். ரத்னாயக்க மேற்பார்வையில் கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பதில் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் எஸ். எம்.பி.பி.எம் டயஸ் தலைமையிலான உப பொலிஸ் பரிசோதகர் எச்.ஜி.பி.கே நிஸ்ஸங்க உள்ளிட்ட பொலிஸ் சார்ஜன்ட்களான பண்டார (13443) வீரகோன்(33354) பொலிஸ் கன்டபிள்களான பெரேரா (71664) அபேரட்ன (75812) நிமேஸ்(90699) சாரதி ஜெயரட்ன (19786) அதிகாரிகள் இந்நடவடிக்கையை முன்னெடுத்து சந்தேக நபரை கைது செய்தனர். பின்னர் கைது செய்யப்பட்ட நபர்கள் சான்று பொருட்களுடன் நிந்தவூர் பொலிஸாரிடம் விசேட அதிரடிப்படையினர் நீதிமன்ற நடவடிக்கைக்காக பாரப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206